ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2094/48 - 2018 ඔක්තෝබර් මස 27 වැනි සෙනසුරාදා - 2018.10.27

*2094/48 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### *1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: 4/1/5/21.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/WS/29.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில், இல. 834, குருநாகல் நகர வட கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், குருநாகல் நகரின் (5 ஆம் பிரிவு - குருநாகல் மாநகர எல்லைக்குள்) அமைந்த, நில அளவை நாயகத்தினால் அளந்து 2018.09.25 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட, கு 2383 ஆம் இலக்கம் கொண்ட ஆரம்ப வரைபடத்தில் காணித்துண்டிலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள, சுமார் 0.0134 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய "பெரமவுன்ட் வத்த" என்னும் காணியில் கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித் துண்டு:

1. **துண்டு இல. 1 - காணியின் பெயர் : பெரமவுன்ட் வத்த; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : திருமதி என். எம். கமகே, பெரமவுன்ட் ஹோட்டல், சூரதிஸ்ஸ மாவத்தை, குருநாகல்; விஸ்தீரணம் : 0.0134 ஹெக்டயார்**

வடக்கு: என். எம். கமகே உரிமைகோரும் பெரமவுன்ட் வத்த, பாதை மற்றும் ஆரம்ப வரைபடத்தின் இலக்கம் கு 1030 இல் 3 ஆம் இலக்க காணித் துண்டு; கிழக்கு: பாதை மற்றும் இவ்வரைபடத்தின் 2 ஆம் இலக்க காணித்துண்டு; தெற்கு: 2 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் சூரதிஸ்ஸ மாவத்தை; மேற்கு: சூரதிஸ்ஸ மாவத்தை மற்றும் என். எம். கமகே உரிமைகோரும் பெரமவுன்ட் வத்த.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு குருநாகல் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. எம். எம். எஸ். ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
குருநாகல்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
குருநாகல்,
2018, ஒற்றோபர் 25.

*11 - 509*

1A - G 28813 - 22 (2018/10)   இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.